# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2048/2 - 2017 දෙසැම්බර් මස 04 වැනි සඳුදා - 2017.12.04

2048/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது.)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் டுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாக பயன்படுத்துவதை தடை செய்வதற்கான பணிப்புக்கள்**

லங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 (ஆ) (4) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ணைக்குழுவினால் தயாரிக்கப்படுகின்ற அரசுக்கு அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான எவையேனும் அசையும் லது அசையா ஆதனங்களை தேர்தலொன்றின் போது கட்சி/ குழு/ வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் க்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் படுத்தத்தக்கதாக பயன்படுத்துவதை தடைசெய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்கள் இத்தால் ளிப்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேகர,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>அங்கத்தவர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

தல்கள் செயலகம்,
ன மாவத்தை,
ஜகிரிய,
, திசெம்பர் 04.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிலயமைப்பின் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைக்கமைய, "தேர்தலொன்று த்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஒரு பகிரங்க கூட்டுத்தாபனத்திற்கோ சொந்தமான னும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் வையோ தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ணையாளர் நாயகத்திற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால்


PG 3813 --- 907 (2017/12)

அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர். ஆதலால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களும் இப்பணிப்புக்களுக்கு அமைவாக நடவடிக்கையெடுக்க வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இவ்விதிகளுக்கு அமைய நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு நிறுவன தலைவர்கள் வகைகூற வேண்டும். இவ்விதிகள் அனைத்து அரசாங்கங்களினதும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் செல்லுபடியாகும்.

அலுவலர்கள் :

(i) அரசாங்க அலுவலர்களின் ஆற்றல், அறிவு மற்றும் அவர்களது நேரம் என்பன அரசாங்க ஆதனங்களாதலால் எந்தவோர் அரச அலுவலருக்கும் தனது அலுவலக நேரத்திற்குள் அதாவது கடமைக்கு அறிக்கையிட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை லீவு பெறப்பட்டுள்ளவிடத்தும் அலுவலகத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகளற்ற அலுவலர்கள் லீவினைப் பெற்றேனும் அரசியல் பணிகளில் ஈடுபடக்கூடாது. அரசியல் உரிமைகள் உள்ள அலுவலர்களுக்குக்கூட அலுவலக நேரத்திற்குள் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபட முடிவது ஏற்கனவே அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட தனிப்பட்ட அல்லது விசேட லீவின் அடிப்படையில் மாத்திரமேயாகும் ;

(ii) எந்தவோர் அலுவலருக்கோ அல்லது ஊழியருக்கோ அரசியல் நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களை அதாவது ஏனைய அரசாங்க அலுவலர்கள், வாகனங்கள், பிரச்சார உபகரணங்கள், அச்சு இயந்திரங்கள், தொலைபேசி வசதிகள் போன்ற அரசுக்கு சொந்தமான எதனையும் பயன்படுத்தும் உரித்துரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் முற்றிலும் தடையாகும்.

(iii) அரசியல் அமைப்புச் சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களின் தத்துவத்தின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் என்பவற்றை ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்வதை தவிர்த்தல் வேண்டும் ;

(iv) தேர்தலோடு தொடர்புடைய பிரதேசங்களின் தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படவுள்ள அரசாங்க பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றல்கள், வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் செல்லும் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்கின்ற போது அரசியல் ரீதியான காரணங்களுக்காக அவ்விடமாற்றங்களை மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, அவ்வாறு மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்காதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். ஒழுக்காற்றுக் கட்டளையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களுக்கு இவ்விதி செல்லுபடியாகாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இடமாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அது தொடர்பாக ஆணைக்குழுவை அறிவூட்டி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(v) தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர் ஆட்சேர்ப்புக்கள்/பதவியுயர்வுகள் என்பவற்றுக்கான நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டமொன்றை அல்லது உள்ளக பதவியுயர்வு செயற்திட்டமொன்றை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது நிறுவனத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றவிடத்தும் முழு நாட்டையும் அளாவிய ரீதியில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/பதவியுயர்வுகள் என்பன முறையாகவும் அரசியல் தலையீடுகளற்ற முறையிலும் மேற்கொள்ளப்படுவது பற்றி உரிய அதிகாரிகளுக்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்த சந்தர்ப்பங்களில் அதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை வழங்க முடியும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) சுகாதார, சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு அலுவல்கள் தடைப்படுவதை தடுப்பதற்காக மற்றும் கட்டாய சேவைகளைப் பேணிச் செல்வதற்காக பிரதேச மட்டத்திலோ மாகாண மட்டத்திலோ ஊழியர்களை ஆட்சேர்ப்பதாயின் அத்தகைய ஆட்சேர்ப்புக்களும் கூட தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டோடு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு, எந்தவோர் அரசியல் ரீதியான தலையீடுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்றது.